சுருக்கம்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – தொலைநிலைக் கல்வி இயக்ககம்– புதிய பாடப்பிரிவுகள் – தொடக்கநிலை மற்றும் அடிப்படை நிலை படிப்புகள் தொடங்க அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.197

நாள்.30.07.2013
விஜய – ஆடி – 14
திருவள்ளுவராண்டு – 2044

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.235, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.2–1)த் துறை, நாள்.12.07.2012

படிக்க:

2. தமிழ்ப் பல்கலைக்கழக பதிவாளர் (பொ) அவர்களின் கடிதம் தொ.நி.க.எண். டி1/ 5454 / 2012, நாள்.22.12.2012, 05.03.2013 மற்றும் 09.07.2013
3. இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.வ.செ.2 / 12942 / 2012, நாள்.05.03.2013

*******

ஆணை:–

மேலே, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உரிய நோக்கங்களை உள்ளடக்கிய செயல்பாடுகளில் ஒன்றான தமிழ்வழி கற்பிப்பதன் மூலம் தமிழ் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், ஆட்சிக்குழு முடிவுகளின்படி, தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தையும், அதன்கீழ் இயங்கி வரும் கல்வி மற்றும் தகவல் மையங்களைத் தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் 2005–06 ஆம் ஆண்டு முதல் தொடங்கிச் செயற்படுத்தப்பட்டு வருவதற்கு பின்னேற்பு வழங்கி ஆணையிடப்பட்டது. மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைச் சட்ட விதி எண் அத்தியாயம் II-3,4–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "தமிழகத்திலும் பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளிலும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககக் கல்வி மற்றும் தகவல் மையங்களைத்" தொடங்கி நடத்துவதற்கும் ஆணையிடப்பட்டது. மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் தொடங்கப்பட்ட பொழுது, புதுதில்லி–DEC நிறுவனம் வழங்கிய ஓராண்டு காலத் தற்காலிக அனுமதிக்கான (Provisional Recognition) கடிதத்தில் (F.No.DEC-Uni / State / 07/ 5618.dt.3.9.2007) தெரிவித்திருந்தவாறு ஆட்சிக்குழு அனுமதிக்கும் (Approved by the statutory bodies of your University) அனைத்துப் பாடப் பிரிவுகளையும், ஆட்சிக்குழு ஒப்புதலளித்த நாளான 1.7.2005 முதல் தமிழ் வழி தொடர்ந்து பயிற்றுவித்து வருவதற்கு அரசு அனுமதியளித்து ஆணையிடப்பட்டது. மேலும், இனிவரும் காலங்களில் ஆட்சிக்குழு அவ்வப்போது அனுமதிக்கும் பாடப்பிரிவுகளை தமிழ் வழியிலும், தேவை கருதி ஆங்கில வழியிலும் நடத்துவதற்கு அரசின் முன் அனுமதியை பெறுமாறும் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக பதிவாளர் (பொ) அவர்கள், புதுதில்லி – DEC நிறுவன விதிமுறைகளின்படி, தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககத்திற்கென அமைக்கப்பட்டுள்ள தொலைநிலைக் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டப் பரிந்துரைகளை தொடர்ந்து, 2012–13 ஆம் ஆண்டில் தொடங்கப் பெறுவதற்கான புதிய பாடப்பிரிவுகளுக்கு 27.10.2012 அன்று (பொருண்மை எண்.2012:157) ஆட்சிக்குழுவில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது என்றும் ஆட்சிக்குழு ஒப்புதலளித்த புதிய பாடப்பிரிவுகளில் பின்வரும் தொடக்க நிலைப் படிப்புகளும் இடம் பெறும் என்றும் தெரிவித்துள்ளார்:–

i. தொடக்க நிலை படிப்பு – (Pre-Foundation course) -1 வருடப் படிப்பு
ii. அடிப்படை நிலை படிப்பு –(Foundation course) - 2 வருடப் படிப்பு

இப்பாடப்பிரிவுகள் கிராமப்புற மாணவர்களுக்கு குறிப்பாக பள்ளி இடைவிலகல் மாணவர்களுக்கு, முறைக் கல்விக்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் வகையில், தமிழ் வழியில் நடத்தவும் இப்படிப்புகளில் பின்வரும் பாடப்பிரிவுகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:–

i. தமிழ்
ii. ஆங்கிலம்
iii. கணிதம்
iv. பொருளாதாரம்
v. புவியியல்
vi. வணிகவியல்

இவற்றில் தமிழ் மற்றும் புவியியல் தவிர, மற்ற பாடப்பிரிவுகளுக்கென பிற அரசு கல்லூரிகளிலுள்ள கல்வியாளர்களைக் கொண்டு இப்படிப்புகளுக்கான பாடத்திட்டக் குழுவினை தொலை நிலைக் கல்வி இயக்ககத்தில் அமைத்து பாடத் திட்டங்கள் உருவாக்கப் பெற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும், மேற்கூறிய படிப்புகளைச் செயற்படுத்துவதற்கென தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எவ்வித நிதிச் செலவும் இல்லை என்றும், இப்படிப்புகளைச் செயற்படுத்துவதற்கென புதியதாக ஆசிரியர்கள் / பணியாளர்கள் எவரும் தேவையில்லை என்றும், தற்பொழுதுள்ள ஆசிரியர்கள் / பணியாளர்களைக் கொண்டே இப்படிப்புகளைச் செயற்படுத்தலாம் என்றும் தெரிவித்துள்ளார். எனவே தொடக்கநிலை படிப்பு Pre-Foundation course (1year) மற்றும் அடிப்படைநிலை படிப்பு Foundation course (2year) ஆகிய இரண்டு பாடப்பிரிவுகளையும் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககம் வாயிலாக நடத்துவதற்கும், மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள பாடங்களை பாட திட்டமாக வைத்துக்கொள்வதற்கும் அனுமதி வழங்குமாறு தமிழ்ப் பல்கலைக்கழக பதிவாளர் வேண்டியுள்ளார்.

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்ப் பல்கலைக்கழக பதிவாளரின் மேற்கூறிய கோரிக்கையை அரசு நிலையில் கருதிப் பார்க்குமாறு பரிந்துரைத்துள்ளார்.

5. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககத்திற்கென அமைக்கப்பட்டுள்ள தொலைநிலைக் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டப் பரிந்துரையின் அடிப்படையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்(பொ) அவர்களின் கருத்துருவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில்,கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று, புதுதில்லி – DEC நிறுவன விதிமுறைகளின்படி, தமிழ்ப் பல்கலைக்கழக தொலை நிலைக் கல்வி இயக்ககம் வாயிலாக கீழே குறிப்பிட்டுள்ள பாடப் பிரிவுகளை நடத்தவும், அதில் மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள பாடத் திட்டங்களாக வைத்துக் கொள்வதற்கும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

i. தொடக்க நிலை படிப்பு – (Pre-Foundation course) -1 வருடம்
ii. அடிப்படை நிலை படிப்பு –(Foundation course) - 2 வருடம்

(ஆளுநரின் ஆணைப்படி)

மு.இராசாராம்
அரசு செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்ழகம், தஞ்சாவூர்.
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக்கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலாளரின் தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை.9
இருப்புக்கோப்பு / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
30/7/13